www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

FMM

மதுரை மாவட்டம்

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

12 - ஆம் வகுப்பு

கணக்குப்பதிவியல்

02/08/2024

காலம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 45

பகுதி – I

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்: (10x 1 =10)

1. நிலை அறிக்கை ஒரு
(அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
(இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
(ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்

3. உரிமையாளரின் சொத்துகள் ₹ 1,60,000 மற்றும் பொறுப்புகள் ₹ 50,000 எனில் அவருடைய முதல் தொகை
(அ) ₹ 50,000 (ஆ) ₹ 1,10,000 (இ) ₹ 2,10,000 (ஈ) ₹ 1,60,000

4. கடன் கொள்முதல் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
(அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு (ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு (ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு

5. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
(அ) பெயரளவு கணக்கு (ஆ) சொத்து கணக்கு
(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
(அ) இலாபம் அல்லது நட்டம் (ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
(இ) உபரி அல்லது பற்றாக்குறை (ஈ) நிதிநிலை

7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு
(இ) ஒரு செலவு (ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
(அ) சமமான விகிதத்தில் (ஆ) முதல் விகிதத்தில்
(இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

9. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால் , அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் ,1932 –ன்படி வழங்கப்படும் வட்டி வீதம்
(அ) ஆண்டுக்கு 8% (ஆ) ஆண்டுக்கு 12%
(இ) ஆண்டுக்கு 5% (ஈ) ஆண்டுக்கு 6%

10. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
(அ) சம்பளம் (ஆ) கழிவு (இ) கடன் மீது வட்டி (ஈ) முதல் மீது வட்டி



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி – II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண் 17 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் (5 x 2 = 10)

11. முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன?

12. உயில்கொடை என்றால் என்ன?

13. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.

14. பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்:

| | |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் முதல் (1 ஏப்ரல் 2016) | 2,00,000 |
| ஆண்டு இறுதியில் முதல் (31 மார்ச் 2017) | 3,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 70,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 40,000 |

15. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| | |
|---|---|
| தொடக்கபெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 20,000 |
| இறுதி பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 30,000 |
| மாற்றுச்சீட்டிற்கானரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரியமாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |

16. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின்வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

17. 2018, ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 40,000 இருப்பினைக்காட்டியது. 2018, அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018, மே1 அன்று பாத்திமா கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.

பகுதி – III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண் 24– க்கு கட்டாயமாக விடையளிக்கவும் (5 x 3 = 15)

18. பின்வரும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய முதல் கண்டறியவும்.

| | |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 15,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 60,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்:

| | |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக் கடன் | 5,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

20. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக்கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

21. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக்கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள்மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத்தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாதஇடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாதஇறுதியில் எடுத்திருந்தால்

22. இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

23. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

24. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 5 = 10

25. (அ) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.2018 | 31.12.2018 |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பலகடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல்₹ 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹ 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாபநட்ட அறிக்கை தயாரிக்கவும். (அல்லது)

(ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து பத்மினி, மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி | பத்மா |
|---|---|---|
| 20, 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 20, 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2, 2018 – ல் இலாபப் பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | – |
| கழிவு | – | 21,000 |

26. (அ) கீழேகொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகைபெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர்கட்டணம் பெற்றது | 10,000 | தொடர்விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தாபெற்றது | 15,000 | தொடர்விளையாட்டுப் போட்டிச்செலவுகள் | 10,500 |
| வாடகைபெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கைத் தயார் செய்யவும்

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொகை ரொக்கம் 23,000 | | மைதான வாடகை செலுத்தியது | 12,000 |
| வங்கி ரொக்கம் 12,000 | 35,000 | அச்சுக்கட்டணம் | 5,000 |
| அரங்க வாடகை பெற்றது | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | 2,000 |
| சந்தா பெற்றது | 9,000 | வங்கிக் கட்டணம் | 1,000 |
| பாதுகாப்பு பெட்டகவாடகைப் பெற்றது | 2,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச்செலவுகள் | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 7,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 4,000 |
| | | தணிக்கைக்கட்டணம் | 3,000 |
| | | இருப்பு கீ/இ கை ரொக்கம் 2,000<br>வங்கி ரொக்கம் 14,000 | 16,000 |
| | 59,000 | | 59,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com